தினமணி

**அழிக்கப்படும் விளைநிலங்கள்: சூனியமாகி வரும் விவசாயம்**

First Published : 09 Aug 2010 10:13:26 AM IST

Last Updated : 09 Aug 2010 12:06:20 PM IST

உடுமலை, ஆக. 8: உடுமலை மற்றும் மடத்துக்குளம் வட்டத்தில் உள்ள ஆயிரக் ணக்கான ஏக்கர் விளைநிலங்கள் வேகமாக அழிக்கப்பட்டு வருகின்றன. இதனால் விவசாயிகளின் எதிர்கால வாழ்க்கை சூனியமாகும் நிலை ஏற்பட்டுள்ளது.

÷திருமூர்த்தி அணை மற்றும் அமராவதி அணை பாசன நிலங்கள், ஏழுகுள பாசன நிலங்கள், மானாவாரி பாசன நிலங்கள் என, உடுமலை மற்றும் மடத்துக்குளம் வட்டங்களில் ஒரு லட்சம் ஏக்கருக்கு மேல் விளைநிலங்கள் உள்ளன. இவற்றில் பிரதானமாக தென்னை, கரும்பு, நெல் மற்றும் பல்வேறு வகையான காய்கறி வகைகள், பயிறு வகைகள் விவசாயிகளால் பயிரிடப்பட்டு வருகின்றன.

÷இந்நிலையில் ரியல் எஸ்டேட் தொழில், செங்கல் சூளைகள், காற்றாலை நிறுவனங்கள், கோழிப் பண்ணைகள், தென்னைநார்த் தொழிற்சாலைகளால் ஆயிரக் கணக்கான ஏக்கர் விளைநிலங்கள் அழிந்து வருகின்றன. இதனால் விவசாயிகள், விவசாயக் கூலிகளின் எதிர்கால வாழ்க்கை பறிபோகிறது என்ற குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

ரியல் எஸ்டேட்:

÷கடந்த சில ஆண்டுகளாக உடுமலை மற்றும் மடத்துக்குளம் வட்டத்தில் ரியல் எஸ் டேட் தொழில் கொடிகட்டி பறந்து வருகிறது. முதலில் உள்ளூரைச் சேர்ந்த ஒருசில இடைத்தரகர்களால் மட்டும் செய்யப்பட்டு வந்த இந்த தொழிலில், தற்போது பெரிய நிதி நிறுவன அதிபர்கள், வெளியூரைச் சேர்ந்தவர்கள், வேறு மாநிலங்களைச் சேர்ந்தவர்களும் அதிக அளவில் முதலீடு செய்து வருகின்றனர்.

÷இதற்காக விவசாய விளைநிலங்கள் பெருமளவில் அழிக்கப்பட்டு வருகின்றன. குறிப்பாக ஆயிரக் கணக்கான தென்னை மரங்கள் வேரோடு வெட்டிச் சாய்க்கப்பட்டு வருகின்றன. உடுமலை நகரை ஒட்டியுள்ள போடிபட்டி அருகிலும் பள்ளபாளையம் கிராமத்திலும் ரோட்டின் இருபுறமும் ஆயிரக் கணக்கான தென்னை மரங்கள் வெட்டப்பட்டு லேஅவுட்களாக மாற்றப்பட்டு விட்டன.

÷உடுமலையில் இருந்து வடக்கே 5 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள சின்னவீரம்பட்டி கிராமத்தில் ஆயிரக் கணக்கான தென்னை மரங்கள் வேரோடு சாய்க்கப்பட்டு அந்த நிலங்களும் புதிய லேஅவுட்களாக மாற்றப்பட்டு வருகின்றன.

÷உடுமலையில் இருந்து 12 கி.மீ. தொலைவில் உள்ள பெரிய வாளவாடியில் கடந்த சில நாட்களாக ஆயிரக் கணக்கான தென்னை மரங்கள் கனரக எந்திரங்களால் அழிக்கப்பட்டு வருகின்றன. இதுபோக கோட்டமங்கலம், மடத்துக்குளம், தேவனூர் புதூர், குடிமங்கலம், பெதப்பம்பட்டி, ஜல்லிபட்டி போன்ற கிராமங்களிலும் விளை நிலங்கள் அழிக்கப்பட்டு வருகின்றன.

செங்கல் சூளைகள்:

÷இது ஒருபுறம் இருக்க, மடத்துக்குளம் வட்டத்தில் உள்ள நூற்றுக் கணக்கான செங்கல் சேம்பர்கள் மற்றும் சூளைக்காரர்களால் விளைநிலங்கள் தொடர்ந்து அழிக்கப்பட்டு வருகின்றன. அங்குள்ள விளைநிலங்கள் அனைத்தும் மலடாகி வருகின்றன. கடத்தூர், கணியூர், வேடபட்டி, காரத்தொழுவு உள்ளிட்ட 25க்கு மேற்பட்ட கிராமங்களில் உள்ள விளைநிலங்கள் முற்றிலும் அழியும் நிலைக்கு தள்ளப்பட்டு வருகின்றன.

÷இந்த விளைநிலங்கள் அமராவதி அணையின் மூலம் மூன்று போகம் நெல் விளையும் பூமிகளாக இருந்தவை என்பதும், சூளைகளை எதிர்த்து இப்பகுதி விவசாயிகள் பல ஆண்டுகளாக போராட்டம் நடத்தி வருவதும் குறிப்பிடத்தக்கது.

காற்றாலை நிறுவனங்கள்:

÷உடுமலையின் தெற்கே உள்ள குடிமங்கலம், பூளவாடி, பெதப்பம்பட்டி உள்ளிட்ட 50க்கு மேற்பட்ட கிராமங்களில் 3 ஆயிரம் காற்றாலைகள் இயங்குகின்றன. இந்த கிராமங்களில் உள்ள விவசாயிகள் தங்களது விளைநிலங்களை காற்றாலை நிறுவனங்களிடம் விற்றுவிட்டு மாற்றுத் தொழிலுக்கு சென்று விட்டனர்.

÷மீதமுள்ள ஒரு கிராமங்களின் விவசாயிகளும் தங்களிடம் இருக்கும் விவசாய நிலங்களை காற்றாலை நிறுவனங்களுக்கு கொடுத்துவிட்டு குடும்பத்துடன் வெளியூர் செல்ல முடிவு செய்து விட்டனர்.

÷பருவ நிலை மாற்றத்தால் மழையில்லாததாலும், பிஏபி தண்ணீரை நம்பி ஏமாந்ததாலும் ஆண்டு முழுவதும் விவசாயம் செய்தும் பயனில்லாத நிலையில் நூற்றுக் கணக்கான விவசாயிகள் கோழிப்பண்ணை தொழில் தொடங்கியும், தென்னைநார்த் தொழிற்சாலை தொடங்கியும் விவசாயத்தை கைவிட்டு விட்டனர். தங்களுடைய விளை நிலங்களிலேயே இந்தத் தொழிலை தொடங்கி நடத்தி வருகின்றனர்.

÷இது குறித்து தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்ட செயலாளர் எஸ்.ஆர்.மதுசூதனன் கூறியது:

÷உடுமலை மற்றும் மடத்துக்குளம் வட்டத்தில் ஒரு லட்சம் ஏக்கருக்கு மேல் விவசாய விளைநிலங்கள் இருந்தன. ரியல் எஸ்டேட், செங்கல் சூளைகள், காற்றாலை நிறுவனங்கள்,

கோழிப்பண்ணைகள், நார்த்தொழிற் சாலைகளால் விவசாய நிலங்கள் சூறையாடப்பட்டு வருகின்றன. தற்போது சுமார் 20 ஆயிரம் ஏக்கர் விவசாய நிலங்கள் முற்றிலும் அழிந்து விட்டன.
÷நிலைப்பயிரான தென்னை மரங்கள் அழிக்கப்பட்டு வருவதை ஏற்றுக்கொள்ள முடியாது. இப்படியே போனால் விவசாயிகள் மற்றும் விவசாயக் கூலிகளின் எதிர்காலம் சூனியமாகி விடும். ஆகையால் தமிழக அரசு உடனடியாக இதில் தலையிட்டு, விளைநிலங்களை அழிக்கக் கூடாது என தனியாக ஒரு சட்டம் கொண்டு வர வேண்டும் என்றார்.

**உரித்த தேங்காய் கொள்முதல் விலையை கிலோவுக்கு | 17 ஆக நிர்ணயம் செய்யக் கோரிக்கை**

First Published : 09 Aug 2010 01:15:07 PM IST

பட்டுக்கோட்டை, ஆக. 8: உரித்த தேங்காய் கொள்முதல் விலையை கிலோவுக்கு |. 17 ஆக நிர்ணயம் செய்யுமாறு தமிழக அரசுக்குக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பட்டுக்கோட்டையில் சனிக்கிழமை நடைபெற்ற தஞ்சை மாவட்ட தென்னை விவசாயிகள் சங்கப் பேரவைக் கூட்டத்தில் இதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தென்னை விவசாயிகள் கொப்பரை தயாரிக்க வசதிகள் இல்லாமல் பெரிதும் சிரமப்படுவதால், அவர்களிடமிருந்து உரித்த முழு தேங்காய்களை கொள்முதல் செய்யலாம் என்ற மத்திய அரசின் உத்தரவை மாநில அரசு ஏற்று அமல்படுத்த வேண்டும்.

வெளிநாட்டிலிருந்து கொப்பரை, பிண்ணாக்கு என்ற பெயரில் எண்ணெய் இறக்குமதி செய்வதை உடனடியாக தடை செய்ய வேண்டும்.

உரித்த முழு தேங்காயை கொள்முதல் செய்யும் வரை கொப்பரை கொள்முதல் விலையை கிலோ | 55 என நிர்ணயம் செய்ய வேண்டும்.

கொப்பரை அடையாள அட்டை வழங்கும் முறையை எளிமைப்படுத்த வேண்டும். தென்னை விவசாயிகளுக்கு நீண்டகால தவணையில் தனிக் கடன் வழங்கும் திட்டத்தையும், தென்னைப் பயிர் காப்பீட்டுத் திட்டத்தையும் விரைந்து அமல்படுத்த வேண்டும்.

காவிரி நடுவர் மன்ற தீர்ப்பின்படி தமிழகத்துக்கு மாத வாரியாக கிடைக்க வேண்டிய தண்ணீரை மத்திய, மாநில அரசுகள் தாமதமின்றி பெற்றுத் தர வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கூட்டத்துக்கு பாப்பாநாடு கோ. சுப்பையன் தலைமை வகித்தார். டி. அருணாசலம், உ. பழனியப்பன், என். நாடிமுத்து, வைத்திலிங்கம், ராஜேந்திரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

தென்னை விவசாயிகள் சங்கத்தின் மாநிலச் செயலர் டாக்டர் வே. துரைமாணிக்கம், பொருளாளர் சோ. பழனிவேல், கே. காளிமுத்து, யு. வேலுச்சாமி, எஸ். மோகன்தாஸ் உள்ளிட்டோர் பேசினர்.

தென்னை விவசாயிகள் கிருஷ்ணமூர்த்தி, தம்பிக்கண்ணு, மார்க்ஸ், கோபு, அகமது மக்தும், வைத்திலிங்கம், ராஜகோபால் உள்பட பலர் பங்கேற்றனர். ராஜ. ராமலிங்கம் வரவேற்றார். பி.ஆர். நாதன் நன்றி கூறினார்.

**"இயற்கை விவசாயத்துக்கு முரணானது அல்ல'**

First Published : 09 Aug 2010 01:14:44 PM IST

தஞ்சாவூர், ஆக. 8: தமிழ்நாடு மாநில வேளாண்மை மன்றச் சட்டம் இயற்கை விவசாயத்துக்கு முரணான சட்டம் அல்ல என்றார் முன்னாள் மத்திய இணை அமைச்சர் சுப்புலட்சுமி ஜெகதீசன்.

காவிரி டெல்டா மேம்பாட்டு ஆராய்ச்சி மையம் சார்பில் தஞ்சாவூரில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற தமிழ்நாடு மாநில வேளாண்மை மன்றச் சட்டம் குறித்த கருத்தரங்கைத் தொடக்கிவைத்து அவர் மேலும் பேசியது:

தமிழக அரசு அறிமுகப்படுத்திய இந்தச் சட்டத்தில் இயற்கை விவசாயத்துக்கு முரணாக எதுவும் கூறப்படவில்லை. அதேபோல, இயற்கை விவசாயம் குறித்து விழிப்புணர்வு செய்தால் அபராதம், தண்டனை விதிக்கப்படும் என்றும் கூறப்படுவதிலும் உண்மை இல்லை.

இந்தச் சட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவிப்போர் சரியான காரணத்தைக் கூறினால், அதில் திருத்தம் செய்யவோ அல்லது மாற்றம் கொண்டுவருமாறோ அரசிடம் தெரிவிக்கலாம்.

சிறு, குறு விவசாயிகள், எஸ்சி, எஸ்டி ஆகியோரின் பட்டா நிலங்களில் மழைநீரை சேகரிப்பது, பண்ணைக் குட்டை அமைப்பது போன்றவற்றை 100 நாள் வேலைத் திட்டத்தில் சேர்க்கலாம் என்று முதல்வர், துணை முதல்வர் ஆகியோரிடம் ஆலோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து ஆய்வு செய்ய குழு அமைக்கப்பட்டுள்ளது.

இடுபொருள் உற்பத்தி நிறுவனங்களின தவறான வழிகாட்டுதலால் விவசாயிகள் குழம்பிப் போய் உள்ளனர். எனவே, விவசாயம் பாதிக்கப்படாமல் இருக்க விவசாயிகளுக்கு சரியான வழிகாட்டுதல் அவசியம்.

தற்போது விளை நிலங்கள் மனைகளாக மாறி வரும் சூழலில், குறைந்த அளவு நிலத்தில் அதிக உணவுப் பொருளை உற்பத்தி செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இயற்கை வேளாண் உற்பத்திப் பொருள்களுக்கு வெளிநாட்டில் நல்ல வரவேற்பு இருக்கிறது.

ஆனால், அந்தப் பொருள் இயற்கை வேளாண் பொருள்தான் என்பதற்க்கு என்ன ஆதாரம் உள்ளது எனக் கேட்கிறார்கள்.

இதைச் சரிசெய்யும் வகையில்தான், தமிழக அரசு வேளாண் துறை சார்பில் இயற்கை விவசாயத்தால் உற்பத்தியான பொருள் என்று சான்றிதழ் வழங்குகிறது.

பருவத்தில் எந்தப் பொருளை உற்பத்தி செய்தால் லாபம் கிடைக்கும் என்று விவசாயிகளுக்கு வேளாண் அலுவலர்கள் ஆலோசனை கூற வேண்டும் என்றார் சுப்புலட்சுமி ஜெகதீசன்.

கருத்தரங்கில் சென்னை வளர்ச்சி ஆய்வு மைய முன்னாள் தலைவர் எஸ். நீலகண்டன் உள்ளிட்டோர் தலைமையில் பல்வேறு தலைப்புகளில் அமர்வுகள் நடைபெற்றன.

தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் வி. ராஜகோபால், ஆராய்ச்சி மையத் தலைவர் எஸ். ரங்கநாதன், பேராசிரியர் டி. கோவிந்தராஜன், பேராசிரியர் எஸ். ஜனகராஜன் உள்ளிட்டோர் பேசினர்.

தமிழ்நாடு வேளாண் துறை ஆணையர் எஸ். கோசலராமன் கருத்தரங்க நிறைவுரையாற்றினார்.

**தோட்டக்கலைப் பயிர் உற்பத்தியை அதிகரிக்க அரசு மானியம்**

First Published : 09 Aug 2010 11:32:59 AM IST

தேனி, ஆக. 8: தேனி மாவட்டத்தில் தோட்டக்கலைப் பயிர் உற்பத்தியை அதிகரிக்க மரக் கன்றுகள் மற்றும் உரம் மானியம் வழங்கப்படுகிறது.

இது குறித்து உத்தமபாளையம் தோட்டக்கலை உதவி இயக்குநர் பி.ராஜன் கூறியதாவது:தேசிய தோட்டக்கலை இயக்கத் திட்டத்தில் தோட்டக்கலைப் பயிர் சாகுபடி மற்றும் உற்பத்தியை அதிகரிக்க, மரக்கன்றுகள் மற்றும் உரம் மானியம் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தில் மா பயிருக்கு ஒரு ஹெக்டேருக்கு முதல் ஆண்டு ரூ.9900, இரண்டாம் ஆண்டு ரூ.4500, மூன்றாம் ஆண்டு ரூ.6750 மானியம் வழங்கப்படுகிறது. நெல்லி பயிருக்கு முதல் ஆண்டு ரூ.10 ஆயிரத்து 504, இரண்டாம் ஆண்டு ரூ.4500, மூன்றாம் ஆண்டு ரூ. 6750 மானியமும், கொட்டை முந்திரி சாகுபடி மற்றும் தென்னையில் ஊடுபயிராக கோகோ பயிரிடுவதற்கு முதல் ஆண்டு ரூ. 12 ஆயிரம், இரண்டாம் ஆண்டு ரூ.2250, மூன்றாம் ஆண்டு ரூ.3375 மானியமும் வழங்கப்படும்.மலர் சாகுபடியில் கிழங்கு வகை மலர் பயிராகிய நிலச்சம்மங்கி பயிருக்கு ஒரு ஹெக்டேருக்கு ரூ.45 ஆயிரம், மல்லிகை, குண்டுமல்லி, கோழிக்கொண்டை, ரோஜா, கனகாம்பரம், சாமந்தி ஆகியவற்றுக்கு ரூ.12 ஆயிரம் மானியம் வழங்கப்படும். மிளகாய் சாகுபடியை அதிகரிக்கும் வகையில் ஹெக்டேருக்கு ரூ.12 ஆயிரத்து 500 மானியம் வழங்கப்படும்.

புதிதாக திராட்சை சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு இந்த ஆண்டு முதல் ஹெக்டேருக்கு ரூ.30 ஆயிரம் மானியம் வழங்கப்படும். தோட்டக்கலை பயிரில் உற்பத்தித் திறனை அதிகரிக்கும் வகையில் அடர் நடவு முறையில் மா, வாழை சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு மானியம் வழங்கப்படுகிறது.

மேலும், துல்லிய பண்ணையம் திட்டத்தில் வாழை மற்றும் காய்கறிப் பயிர்கள் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு ஹெக்டேருக்கு ரூ.63 ஆயிரத்து 640 மானியம் வழங்கப்படும்.

தோட்டக்கலை பயிர்களுக்கு மானிய உதவி பெறுவதற்கு விவசாயிகள் தங்களது நிலத்தின் சிட்டா, அடங்கல், புகைப்படம், குடும்ப அட்டை நகல் ஆகியவற்றுடன் சம்பந்தப்பட்ட வட்டாரத்தில் உள்ள தோட்டக்கலை உதவி இயக்குநர் அலுவலகத்தை தொடர்புகொள்ளலாம் என்றார்.

**சொட்டு நீர் பாசனம் அமைக்க அறிவுறுத்தல்**

First Published : 09 Aug 2010 01:00:38 PM IST

அரவக்குறிச்சி, ஆக. 8: அரவக்குறிச்சி வட்டாரத்தில் விவசாயிகள் சொட்டுநீர் பாசனம் அமைக்க வேண்டுமென வலியுறுத்தப்பட்டுள்ளது.

இதுகுறித்து தோட்டக்கலை உதவி இயக்குநர் (பொ) மு. சௌந்தரம்மாள் தெரிவித்தது:

கரூர் மாவட்டத்தில் அதிகளவில் மருத்துவ பயிர்களான காந்தல் மலர் (கண்வழிக் கிழங்கு) மற்றும் கோலியஸ் போன்ற பயிர்கள் பயிரிடப்படுகின்றன.

அரவக்குறிச்சி பகுதியில் கடந்தாண்டுகளில் காந்தல்மலர் பயிருக்கு சொட்டு நீர் பாசனம் அமைத்த விவசாயிகள் வாய்க்காலில் தண்ணீர் பாய்ச்சி எடுத்த மகசூலை விட, சொட்டு நீர் பாசனம் அமைத்ததில் அதிகப்படியான மகசூல் கிடைத்ததாகக் கூறுகின்றனர்.

எனவே, நிகழாண்டில் சொட்டுநீர் பாசனம் அமைக்கலாம்.

சொட்டு நீர் பாசனம் அமைக்கும் விவசாயிகளும், காந்தல் மலர் பயிருக்கு மானியம் பெறவுள்ள விவசாயிகளும் அரவக்குறிச்சி வேளாண்மை விரிவாக்க மையத்தில் உள்ள தோட்டக்கலை அலுவலகத்தில் விண்ணப்பங்களை அளிக்கலாம்.

**மாற்றங்களைத் தாங்கும் வகையில் புதிய நெல் ரகங்களைக் கண்டுபிடிக்கக் கோரிக்கை**

First Published : 09 Aug 2010 12:59:45 PM IST

கரூர், ஆக.8: தமிழகத்தில் பருவகால் மாற்றங்களைத் தாங்கும் வகையிலான புதிய ரக நெல் விதைகளைக் கண்டுபிடிக்க வேண்டுமென காவிரி நீர் பாசன விவசாயிகள் நலச்சங்க செயல் தலைவர் வி. ராஜாராம் கேட்டுக் கொண்டுள்ளார். அவரது அறிக்கை:

மேட்டூர் அணையின் நீர்மட்டம் ஆகஸ்டு 1ம் தேதி 82.20அடியாக இருந்தது. ஆடி 18 ஐ முன்னிட்டு டெல்டா பாசனத்திற்காக தண்ணீர் திறந்து விடப்பட்டது. ஆனால், இந்த தண்ணீர் விரைவில் நிறுத்தப்பட்டுவிடும். காவிரி நீர்பிடிப்புப் பகுதிகளிலுள்ள கே.ஆர்.எஸ், கபினி,

ஹேமாவதி அணைகள் முழுமையாக நிரப்பினால் மட்டுமே மேட்டூர் அணைக்குத் தண்ணீர் கிடைக்க வாய்ப்புள்ளது.

கிருஷ்ணராஜசாகர் அணை நிரம்பி வினாடிக்கு 40ஆயிரம் முதல் 50ஆயிரம் கனஅடி நீர் தொடர்ந்து வெளியேறினால்தான் சம்பா சாகுபடியைக் காப்பாற்ற முடியும்.

இதே நிலைதான் குறுவைச் சாகுபடிக்கும் உள்ளது.

மேலும், உலகின் வெப்பநிலை உயர்வால் அரிசி பயிரிட்டு வரும் நாடுகளில் உற்பத்தி வெகுவாக குறையும் என்று ஒரு ஆய்வு அறிக்கையும் தெரிவித்துள்ளது.

இவ்வாறு, பாசனத்திற்கு தண்ணீர் கிடைக்காத நிலை ஒருபுறம், பூமி வெப்பமய மாதலால் ஏற்படும் பருவ நிலை மாற்றங்கள் ஒருபுறமென விவசாயம் பெரும் பாதிப்புக்குள்ளாகும் நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே, இந்த மாற்றங்களைத் தாக்குப் பிடிக்கும் புதிய ரக நெல் விதைகளை கண்டுபிடிக்கும் முயற்சியில் மத்திய, மாநில அரசுகள் ஈடுபட வேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளார்.

தினமலர்

**சம்பா பருவத்திற்கு மானியவிலையில் விதை நெல்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 10,2010,01:08 IST

கடலூர்: கடலூர் வட்டாரத்தில் மானிய விலையில் சம்பா பருவ விதை நெல் வினியோகம் செய்யப்படுகிறது என வேளாண் உதவி இயக்குனர் கூறியுள்ளார்.

இது குறித்து வேளாண் உதவி இயக்குனர் இளவரசன் விடுத்துள்ள செய்திக் குறிப்பு:ஒருங்கிணைந்த தானிய அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் நடப்பு சம்பா பருவத்திற்கான சான்று பெற்ற நெல் ரக விதைகள் பொன் மணி, மேம்படுத்தப்பட்ட வெள்ளைப் பொன்னி, பி.பி.டி.5204, ஏ.டி.டி.39. உயர் விளைச்சல் கலப் பின ரகமான கே.ஆர்.எச். 2 ஆகிய ரகங்கள் மானிய விலையில் வினியோகம் செய்யப்படுகின்றன.ஒரு கிலோ விதை நெல் 5 ரூபாய் மானியம் வீதம் வழங்கப்படுகிறது.கடலூர் வட்டாரத்திலுள்ள கடலூர், கீழ்குமாரமங்கலம் மற்றும் தூக்கணாம் பாக்கம், வேளாண்மை விரிவாக்க மையங்களில் நெல் ரக சான்று பெற்ற விதைகள் இருப்பு வைக்கப்பட்டு வினியோகம் செய்யப்படுகின்றன.விவசாயிகள் மானிய விலையில் அரசின் சான்று பெற்ற விதைகளை வாங் கிப் பயன்படுத்தி அதிக மகசூல் பெற கேட்டுக் கொள்ளப்படுகிறது.இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

அசோகபுரம் "பி' குடோனில் மஞ்சள் ஏலம் நடத்த வலியுறுத்தல்

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 10,2010,03:17 IST

ஈரோடு: அசோகபுரம் ஒழுங்குமுறை விற்பனைக்கூட "பி' கிடங்கில், மஞ்சள் ஏலம் நடத்தி ஈரோடு மஞ்சள் வணிகர்கள் மற்றும் கிடங்கு உரிமையாளர் சங்கம் வலியுறுத்தியுள்ளது. சங்க செயலாளர் நடராஜன் அறிக்கை: விவசாயிகளுக்கும், வியாபாரிகளுக்கும் வசதியாகவும், பணம் பட்டுவாடா செய்வதில் பாதுகாப்பு கருதியும், மஞ்சள் விற்பனை தொகையை எடுத்துக் கொண்டு விவசாயிகள் செல்வதற்கு பாதுகாப்பாகவும், ஈரோடு நகரை ஒட்டி இரண்டு கி.மீ., சுற்றளவில் ஈரோடு ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்துக்கு அலுவலகமும், சேமிப்பு கிடங்கும், ஏலக் கொட்டகையும் தேர்வு செய்ய சங்கம் சார்பில் கோரினோம். இடம் தேர்வுக்கு முன், வியாபாரிகளிடம் ஆலோசித்து முடிவு செய்யுமாறு கேட்டுக் கொண்டோம். ஆனால், எவ்வித அறிவிப்புமின்றி, சுண்ணாம்பு ஓடையில் விற்பனைக் கூடத்தை இடமாற்றினர்.சுண்ணாம்பு ஓடையில் தேர்வு செய்துள்ள இடத்தில் மஞ்சள் மூட்டைகளை சேமிப்பு மட்டும் வைத்துக் கொள்ளுமாறும், மஞ்சள் ஏலக் கொட்டகையும், பணம் பட்டுவாடா செய்யும் இடமும், வியாபாரிகளுக்கு "பர்மிட்' வழங்குவதையும், இப்போது அசோகபுரத்தில் உள்ள ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் "பி' கிடங்கில் செயல்படுத்த கோரினோம்.

ஈரோடு ஒழுங்குமுறை விற்பனைக்குழு செயலாளர் மற்றும் சென்னையில் கமிஷனரிடம் இக்கோரிக்கையை நிறைவேற்றி தரும்படி கோரினோம். கமிஷனர் அதுல் ஆனந்தின் உத்தரவின் பேரில், சென்னையில் இருந்து இணை இயக்குனர் ராமமூர்த்தி ஆகஸ்ட் 4ல் ஆய்வு செய்தார்.எங்கள் கோரிக்கையை ஏற்று அசோகபுரத்தில் உள்ள "பி' குடோனில் ஏலமும், பணப்பட்டுவாடா "பர்மிட்' வழங்குதல் ஆகிய எங்கள் கோரிக்கையை ஏற்றுக் கொண்டார். எனவே, விற்பனைக்குழு உறுப்பினர்களும், அரசு அதிகாரிகளும் நடவடிக்கை எடுத்து, அசோகபுரம் "பி' குடோனில் ஏலம் நடத்தவும், பணப்பட்டுவாடா செய்யவும், வியாபாரிகளுக்கு அனுமதிச் சீட்டு வழங்கவும் ஏற்பாடு செய்ய வேண்டும்.
இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

**ரூ. 1.73 கோடி காய்கறி விற்பனை**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 10,2010,03:23 IST

கோபிசெட்டிபாளையம்: கோபி உழவர் சந்தையில் கடந்த நான்கு மாதங்களில் ஒரு கோடியே 73 லட்சம் ரூபாய் மதிப்பில் காய்கறி விற்பனை நடந்துள்ளது. கோபி மொடச்சூர் உழவர் சந்தைக்கு, நம்பியூர், டி.என்.பாளையம் பகுதி விவசாயிகள் காய்கறிகள், பழங்களை நாள்தோறும் விற்பனைக்கு கொண்டு வருகின்றனர். ஏப்ரல் முதல் ஜூலை வரை 1,125 டன் காய்கறி விற்பனைக்கு வந்துள்ளது. 12 ஆயிரத்து 482 விவசாயிகளும், இரண்டு லட்சத்து 25 ஆயிரத்து 69 பொதுமக்களும் கோபி உழவர் சந்தைக்கு வந்துள்ளனர். நான்கு மாதங்களில் ஒரு கோடியே 73 லட்சத்து 98 ஆயிரத்து 347 ரூபாய் மதிப்பில் காய்கறிகள் விற்பனை நடந்துள்ளது.

**குருனை வடிவ யூரியா பயன்படுத்த யோசனை**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 10,2010,03:24 IST

நாமக்கல்: "விவசாயிகள் கூடுதல் மகசூல் பெற்று அதிக லாபம் ஈட்ட குருனை வடிவ யூரியாவை பயன்படுத்தலாம்' என, நாமக்கல் வேளாண் உதவி இயக்குனர் பேபிகலா தெரிவித்துள்ளார். அவர் வெளியிட்டுள்ள அறிக்கை: குருனை வடிவ யூரியாவை பயிர்களுக்கு இடும்போது பயிர் பச்சை பிடிப்பது சிறிது தாமதமாவதால், சாதாரண யூரியாவை அதிக அளவில் விவசாயிகள் விரும்புகின்றனர். குருனை வடிவ யூரியாவில்தான் அதிக பலன் உள்ளது. இரண்டு வகையான யூரியாவிலும் 46 சதம்தான் தழைச்சத்து உள்ளது. குருனை வடிவ யூரியாவில் உள்ள தழைச்சத்து மிகவும் மெதுவாகவும், சீராகவும் நீண்ட நாட்களுக்கு பயிர்களுக்கு கிடைக்கின்றது. அதனால், பயிர் நீண்ட நாட்களுக்கு பசுமை மாறாமல் இருக்கும். தழைச்சத்து பயன்படுத்தும் அளவும் குறைகிறது. சாதாரண யூரியாவை மண்ணில் இடும்போது உடனடியாக கரைவதால் தழைச்சத்து நீரின் மூலமாகவும், ஆவியாதல் மூலமாகவும் வீணாகிறது.

குருனை வடிவ யூரியாவை பயிர்களுக்கு தெளிப்பது மிகவும் எளிதானது. அதில் ஈரப்பதம் குறைவாக இருப்பதால் கட்டியாவது இல்லை. திறந்து வைத்திருக்கும் நிலையில் காற்றில் உள்ள ஈரப்பதத்தை உறிஞ்சி தண்ணீராக மாறுவதும் இல்லை. சேமிப்பதற்கும், உபயோகிப்பதற்கும் எந்தவித சிரமமும் இல்லை. குருனை வடிவ யூரியா சாதாரண யூரியாவை விடஎடை அதிகமாக இருப்பதால், பயிர்களுக்கு இடும் போது காற்று மற்றும் நீரினால் அடித்துச் செல்லப்படுவதில்லை. சாதாரண யூரியா துகள்களாக இருப்பதால் இலையின் மேற்பரப்பில் படிந்து பயிர்களுக்கு சேதத்தை உண்டாக்குகிறது. எனவே, குருனை வடிவ யூரியாவை பயன்படுத்தி கூடுதல் மகசூல் பெற வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

**மதிப்பூட்டிய பொருட்கள் உழவர் சந்தையில் ரூ.42 லட்சம் விற்பனை**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 10,2010,03:22 IST

நாமக்கல்: "நாமக்கல் மாவட்டத்தில் உள்ள உழவர் சந்தைகளில் கடந்த ஓராண்டில் மட்டும் மதிப்பூட்டப்பட்ட பொருட்கள் 42 லட்சம் ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது' என, வேளாண் துணை இயக்குனர் (பொறுப்பு) சவுந்திரராஜன் தெரிவித்துள்ளார்.அவர் வெளியிட்ட அறிக்கை:நாமக்கல் மாவட்டத்தில் உள்ள விவசாயிகள் உற்பத்தி செய்த காய்கறி, பழங்களை உழவர்சந்தையில் இடைத்தரகர்கள் இன்றி நேரடியாகவும், சந்தை விலையை விட கூடுதலான விலையிலும் விற்பனை செய்து வருகின்றனர். விவசாயிகள் உற்பத்தி செய்த பொருட்களை மதிப்பூட்டப்பட்ட பொருட்களாக மாற்றி உழவர் சந்தைகளில் விற்பனை செய்ய கடந்த ஆண்டு அனுமதி அளிக்கப்பட்டது. இந்த விற்பனை துவங்கப்பட்டு ஓராண்டு நிறைவடைந்துள்ளது.

நாமக்கல் மாவட்டத்தில் உள்ள உழவர் சந்தைகளில் மதிப்பூட்டப்பட்ட பொருட்ளான பால், தயிர், மோர், நெய், பனீர், பால்கோவா, சோளமாவு, வெல்லம், ஊறுகாய் வகைகள், சிறுதானிய பிஸ்கெட் மற்றும் நாட்டுக்கோழி, நாட்டுக்கோழி முட்டை என 40க்கும் மேற்பட்ட பொருட்கள் கடந்த ஒரு ஆண்டில் 42 லட்சத்து 17 ஆயிரத்து 723 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது. விவசாயிகளால் விற்பனை செய்யப்படும் பொருட்கள் சுத்தமாகவும், தரமாக உள்ளதாலும், குறைவான விலையில் கிடைப்பதாலும் நுகர்வோரிடையே நல்ல வரவேற்பை பெற்றுள்ளது. மதிப்பூட்டப்பட்ட பொருட்கள் விற்பனை செய்வதால் விவசாயிகளுக்கு கூடுதல் வருமானம் கிடைப்பதுடன், வாழ்வாதரமும் மேம்பட்டுள்ளது. எனவே, விவசாயிகள் தாங்கள் உற்பத்தி செய்த பொருட்களை மதிப்பூட்டப்பட்ட பொருட்களாக மாற்றி விற்பனை செய்து பயன்பெறலாம். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**மானிய விலையில் உரம்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 09,2010,22:34 IST

சிங்கம்புணரி; எஸ்.புதுார் ஒன்றியத்தில், மானாவாரி கடலை பயிர் செய்துள்ள விசாயிகளுக்கு, மானிய விலையில் ஜிப்சம் வழங்கப்படுகிறது. இப்பகுதியில் கடலை பயிர் செய்து, கம்பி இறங்கும் பருவத்தில் உள்ளது. கடலை திரட்சியாகவும், எண்ணெய் சத்து அதிகமாகவும், எடை கூடுதலாக கிடைக்க, ஏக்கருக்கு 80 கிலோ ஜிப்சம் இடவேண்டும். இது 50 சதவீத மானிய விலையில் விரிவாக்க மையத்தில் வழங்கப்படுகிறது என, வேளாண்மை உதவி இயக் குனர் மணிவண்ணன் தெரிவித்துள்ளார்.

**மண் வளத்தை பாதுகாக்க இயற்கை உரமிட வேண்டும்: வேளாண் அதிகாரி**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 10,2010,02:36 IST

குளித்தலை: "மண் வளத்தை பாதுகாக்க அதிகளவு இயற்கை உரங்களை பயன்படுத்த வேண்டும்,' தோகமலை வேளாண் உதவி இயக்குநர் (பொ) காதர்மொய்தீன் தெரிவித்துள்ளார். அவர் வெளியிட்ட அறிக்கை: தோகமலை ஒன்றிய பகுதியில், கிணற்று பாசனம் மற்றும் ஆற்றுப்பாசனம் மூலம் நெல் சாகுபடி செயயப்படுகிறது. நச்சலூர், நெய்தலூர் பகுதிகளில் ஓரளவு ஆற்றுப்பாசனம் நடக்கிறது. ஆலத்தூர், கல்லடை, வடசேரி, கழுகூர் ஆகிய பஞ்சாயத்துக்களில் கிணற்றுப் பாசனம் மூலம் நெல் சாகுபடி செய்யப்படுகிறது. நெல் சாகுபடியில் அதிக மகசூல் பெற மண் வளத்தை பாதுகாப்பது அவசியம்.

பசுந்தாள் உரமிடுவது, அதிகளவு இயற்கை உரங்களை பயன்படுத்துவதன் மூலம் மண்வளத்தை பாதுகாக்கலாம். பசுந்தாழ் உரமிடுவதில் இரு வகை உண்டு. முதலாவது, பசுந்தழை உரம் என்பது குளக்கரை, தரிசு நிலம் மற்றும் காடுகளில் உள்ள ஆவாரை, புங்கம், பூவரசு, கொட்டி பூவரசு, வேம்பு, வாதநாராயணன், ஆடாதொடா, நுணா, நொச்சி, சவுண்டல் போன்ற மரங்களின் கிளைகளை சேமித்து நஞ்சை நிலத்தில் நன்கு மிதித்துவிட வேண்டும்.

ஏனெனில், சில இடங்களில் தழைகள் மக்கள் துவங்கியவுடன் ஒரு வித விஷத் தன்மை ஏற்பட்டு நட்ட பயிரை பாதிக்கும் வாய்ப்புள்ளது. ஏக்கருக்கு 2,500 கிலோ என்ற அளவில் பசுந்தழை இட வேண்டும். இரண்டாவது, தக்கை பூண்டு, கொளுஞ்சி, சணப்பை, அகத்தி, சீமை அகத்தி, பிள்ளியாறு போன்றவற்றை நிலத்தில் பயிரிட்டு, பூ பூக்க துவங்கியவுடன், அதை அப்படியேநிலத்தில் மடக்கி உழுது விட வேண்டும். பயிறு வகை பயிர்கள் காற்றில் உள்ள தழைச்சத்தினை அதிகளவு மண்ணில் நிலைப்படுத்துவதவால், நிலம் வளமடைகிறது. இதை பயிர் செய்யும் செலவு குறைவு என்பதால், குறைந்த செலவில் மண்ணுக்கு தேவையான தழைச்சத்து கிடைக்கும். இதனால், அதிக மகசூல் கிடைப்பதுடன், மண்ணின் வளம் பாதுகாக்கப்படும்.

**பாலமேடு வலையபட்டியில் ஆண்டு முழுவதும் காய்க்கும் கத்தரி**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 09,2010,22:08 IST

பாலமேடு: முறையாக பராமரித்தால் விவசாயத்தில் நல்ல லாபம் கிடைக்கும். அரசு வேலை தேட வேண்டிய அவசியமில்லை என சொல்கிறார் பி.எஸ்.சி., பட்டதாரி ராமசாமி முருகேசன். பாலமேடு அருகே வலையபட்டியில், முதன் முறையாக கேரளாவில் வழுதிளங்காய் என அழைக்கப்படும் பேச்சிப்பாறை பி.பி.ஐ., வகையை சேர்ந்த கத்தரி விவசாயம் செய்யப்பட்டுள்ளது.

வழக்கமான கத்தரி இரண்டு மாதத்தில் பலன் தர ஆரம்பித்து ஆறு மாதங்கள் வரை காய்க்கும். செடியின் உயரம் அதிக பட்சமாக மூன்று அடி உயரம் இருக்கும். செடிக்கு மருந்து தெளித்தல், தண்ணீர் பாய்ச்சுதல், களை எடுத்தல் என அடிக்கடி பராமரிப்பு செய்ய வேண்டும். பராமரிப்பில் குறை ஏற்பட்டால் நோய் தாக்குதல் ஏற்பட்டு நஷ்டத்தை ஏற்படுத்தும். புதியதாக பயிர் செய்யப்பட்டுள்ள கத்தரி,விதை பாவி நடவு செய்த 45வது நாளில் பலன் தர ஆரம்பிக்கிறது. செடி, ஒரு அடி உயரம் முதல் ஆறு அடி உயரம் வரை கொடி போல் வளர்ந்து எடி முதல் நுனி வரை பூ பூத்து காய் காய்க்கிறது. உயரமாக வளர்ந்து ஓரு ஆண்டு வரை பலன் தரக்கூடியது. இதனால் செடி வளரும் போது குச்சி கட்டுதல்,நைலான் கயிறு மூலம் இணைத்தல் பணியை முறையாக செய்ய வேண்டும்.

சாதாரண கத்திரிக்கு பயன்படுத்துவது போல ரசாயன உரம், பூச்சிக் கொல்லி மருந்து தேவை இல்லை. வாரம் ஒரு முறை நீர் பாய்ச்சினால் போதும். ஒரு கிலோ ரூ. 5 முதல் 15 வரை விற்கிறது. வாரத்திற்கு இரண்டாயிரம் முதல் ஐந்து ஆயிரம் ரூபாய் வரையும், ஆண்டுக்கு குறைந்த பட்சமாக ஒரு ஏக்கருக்கு ஒன்றரை லட்சம் ரூபாய் வருவாய் கிடைக்கிறது. விவசாயி ராமசாமிமுருகேசன் கூறியதாவது: முதன் முதலில் மாதிரிக்காக விவசாயம் செய்த கத்தரி, நல்ல லாபத்தை கொடுத்து வருகிறது. ஆரம்பத்தில் செலவு ஒரு ஏக்கருக்கு 15 ஆயிரம் ரூபாய் வரை ஆனது.

பூச்சிக் கொல்லி மருந்தாக கசப்புத்தன்மை கொண்ட, வேம்பு, ஊமத்தை, நொச்சி, ஆவரை, ஆடுதொடா என இலைகளை ஊறவைத்து அதில் கிடைக்கும் ஜூஸை எடுத்து மருந்தாக தெளிக்கிறேன். இந்த வகை கத்தரி விற்பனை செய்வதில் பிரச்னை உள்ளது. விளாங்குடி மார்க்கெட்டில் கேரளாவை சேர்ந்தவர்கள் மட்டுமே வாங்குகின்றனர். அதிக விவசாயிகள் இந்த வகை கத்தரி பயிர் செய்தால் மேலும் லாபம் கிடைக்க வாய்ப்பு உள்ளது. பயிர் செய்ய விரும்புவோர் 9442058025 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம், என்றார்.

**விவசாயிகளுக்கு பயிர் கடன் வழங்க கோரிக்கை**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 10,2010,02:41 IST

தூத்துக்குடி; -மழை சீசன் துவங்குவதற்கு முன்பு விவசாயிகளுக்கு நிலத்தின் அடிப்படையில் பயிர்கடன் வழங்க வேண்டும் என்று தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளது.தமிழ்நாடு விவசாயிகள் சங்க தூத்துக்குடி மாவட்ட குழு கூட்டம் மாவட்டத் தலைவர் ராமையா தலைமையில் நடந்தது. மாவட்ட செயலாளர் நல்லையா வேலை அறிக்கை தாக்கல் செய்து, நடக்க வேண்டிய இயக்கங்கள் குறித்து பேசினார். கூட்டத்தில் கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. மாவட்டத்தில் மழைக்காலம் ஆரம்பிப்பதற்கு முன்னால் விவசாயிகளுக்கு நிலத்தின் அடிப்படையில் பயிர் கடன் வழங்க வேண்டும். விதை, உரம், பூச்சி மருந்து தட்டுபாடு இல்லாமல் கூட்டுறவு விவசாய கடன் சங்கங்கள் மூலம் வழங்க வேண்டும்

என்று கோரிக்கையை வலியுறுத்தி கோவில்பட்டி துணைபதிவாளர் கூட்டுறவு சங்கங்கள் முன்பு வரும் 24ம் தேதி ஆர்ப்பாட்டம் நடத்துவது என முடிவு செய்யப்பட்டது.

விவசாயிகளுக்கு விவசாயத்திற்கு வரும் தண்ணீரை தொழிற்சாலைகளுக்கு எடுப்பதை தடுத்து நிறுத்தக்கோரியும், கால்வாய், மடைகள் சரி செய்யக் கோரியும் இன்று (10ம் தேதி) மாவட்ட கலெக்டர் அலுவலகம் முன்பு ஆர்ப்பாட்டம் நடத்துவது எனவும் முடிவு செய்யப்பட்டது.மேலும் மின்சார கட்டண உயர்வை ரத்து செய்யக் கோரியும், மணல் கொள்ளையை தடுத்து நிறுத்தக்கோரியும், பஸ்கட்டண உயர்வை ரத்துசெய்யக்கோரியும், புதிய ரேஷன் கார்டுகள் காலதாமதம் இல்லாமல் வழங்க கோரியும், விவசாயிகளுக்கு முதியோர் உதவித் தொகை நிபந்தனையின்றி வழங்க கோரியும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. கூட்டத்தில் முன்னாள் எம்எல்ஏ.,க்கள் அய்யலுச்சாமி, ராஜேந்திரன், தாலுகா செயலாளர்கள் கிருஷ்ணமூர்த்தி, லெனின்குமார், ராஜா, சங்கரன், பேச்சிமுத்து உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**ஆடிப்பட்டம் சாகுபடி சிறக்க விவசாயிகள் சிறப்பு வழிபாடு**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 10,2010,02:28 IST

உடுமலை: ஆடி அமாவாசை தினமான நேற்று சாகுபடி செழிக்க வேண்டி, திருமூர்த்திமலை அமணலிங் கேஸ்வரர் கோவிலில் ஆயிரக்கணக்கான விவசாயிகள் மாட்டு வண்டிகளில் வந்து சாமியை வழிபட்டனர்.உடுமலை அருகேயுள்ள திருமூர்த்தி மலையில் சிவன், விஷ்ணு, பிரம்மா ஆகியோர் குடிகொண்டுள்ள அமணலிங்கேஸ்வரர் கோவில் உள்ளது. ஆண்டுதோறும் ஆடி, தை அமாவாசை, சிவன்ராத்திரி ஆகிய தினங்கள் சிறப்பாக கொண்டாடப்படுகின்றன. உடுமலை, பொள்ளாச்சி மற்றும் பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த விவசாயிகள், ஆடி மற்றும் தை பட்ட சாகுபடியை துவக்குவதற்கு முன்பு, விவசாயம் செழிக்க திருமூர்த்தி மலைக்கு வந்து அமணலிங்கேஸ்வரரை தரிசித்து சென்று சாகுபடி பணிகளை துவக்குவது வழக்கம்.இந்த ஆண்டு ஆடி அமாவாசை விழா நேற்று நடந்தது.

நேற்று முன்தினம் மதியத்திலிருந்தே பல்வேறு பகுதிகளிலிருந்து விவசாயிகள் மாட்டு வண்டிகளில் திருமூர்த்திமலையில் குவிந்தனர்.நேற்று அதிகாலை 4.30 மணிக்கு கோவில் நடை திறக்கப்பட்டு, சிறப்புப் பூஜைகள் நடந்தன. ஆடி அமாவாசையை முன்னிட்டு, அமணலிங்கேஸ்வரர் கோவில் அருகே உள்ள தோணியாற்றின் கரையில், இறந்த முன்னோர்களின் ஆன்மா சாந்தியடைய பலர் திதி கொடுத்தனர்.உடுமலை டி.எஸ்.பி., முருகானந்தம் தலைமையில் போலீசார் பாதுகாப்பு

பணியில் ஈடுபட்டனர். உடுமலையிலிருந்து அரசு போக்குவரத்துக் கழகம் சார்பில் திருமூர்த்திமலைக்கு 14 சிறப்புப் பஸ்கள் இயக்கப்பட்டன.

**இயற்கை விவசாயத்தை ஊக்குவிக்க மனு**

ஆகஸ்ட் 10,2010,00:00 IST

காரைக்கால்: இயற்கை விவசாயம் செய்ய ஹெக்டேருக்கு 25 ஆயிரம் ரூபாய் ஊக்கத்தொகை வழங்க வேண்டும் என காரைக்கால் தானியலட்சுமி ஆத்மா குழு சார்பில் முதல்வர் வைத்திலிங்கத்திடம் மனு அளிக்கப் பட்டது.காரைக்காலில் சம்பா சாகுபடியில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து விவசாயிகளுடன் ஆலோசனை கூட்டம் கடந்த 7ம் தேதி காமராஜர் வளாகத்தில் நடந்தது. முதல்வர் வைத்திலிங்கம் தலைமை தாங்கினார். விவசாய சங்க பிரதிநிதிகள் பலர் கலந்து கொண்டனர். கூட்டத்தின்போது, காரைக்கால் தானியலட்சுமி ஆத்மா குழு பொருளாளர் முரளிதரன் இயற்கை விவசாயம் செய்ய ஊக்கத் தொகையை உயர்த்தி தர வேண்டும் என முதல்வர் வைத்திலிங்கத்திடம் மனு வழங்கினார்.

மனுவில் உள்ள விபரம் வருமாறு: காரைக்கால் தானியலட்சுமி ஆத்மா குழுவில் உள்ள 15 உறுப்பினர்கள் தங்களது நஞ்சை நிலத்தில் 2010ம் ஆண்டு அக்டோபர் மாதம் முதல் இயற்கை முறை விவசாயம் செய்ய தீர்மானித்துள்ளோம். அதற் காக அரசு வழங்க உத்தேசித்துள்ள ஹெக்டேருக்கான மானியத்தொகை 10 ஆயிரம் ரூபாய் போதாது. ரசாயன உரமிட்டு வந்துள்ள நிலத்தை மாற்றி, இயற்கை முறையிலான மக்கிய தொழு உரம் மண்புழு உரம் இடுவதற்கு மிகுந்த செலவு செய்ய வேண் டும். மேலும், பூச்சிக் கொல்லிகளை தவிர்த்து இயற்கை முறையில் பூச்சி விரட்டும் மருந்துகளை தயாரிக்க வேண்டியுள்ளது.பசுந்தாள் உரங்களான டேஞ்சர், செஸ்பெனியா, தக்கைபூண்டு போன்றவற்றை பயிரிட்டால் கால்நடைகள் சேதம் செய்யாமல் பணியாட்களை நியமிக்க வேண்டி உள் ளது.

பக்கத்து நிலத்தில் ரசாயன உரமிட்டு விவசாயம் செய்தால், அது இயற்கை முறை வேளாண்மை செய் துள்ள வயலில் உட்புகாதவாறு தடுப் பாக வாய்க்கால் அமைக்க வேண்டி உள்ளது. எனவே, இயற்கை விவசாயம் செய்ய ஹெக்டேருக்கு 25 ஆயிரம் ரூபாய்க்கு குறையாமல் ஊக்கத் தொகை வழங்க வேண்டும்.இவ்வாறு அந்த மனுவில் கூறப் பட்டுள்ளது.

**சிறுவாணி அணையில் தொடர்மழை ஒரே வாரத்தில் 1 மீட்டர் நீர்மட்டம் உயர்ந்தது**

கோவை,ஆக.10–

சிறுவாணி அணையில் கடந்த ஒரு மாதமாக தொடர் மழை பெய்து வருகிறது. கடந்த ஒருவாரத்தில் மட்டும் 1 மீட்டர் நீர்மட்டம் உயர்ந்து உள்ளது.

சிறுவாணி அணை

கோவை மாநகர மக்களின் தாகத்தை தீர்த்துவரும் சிறுவாணி அணையில் கடந்த மே, ஜூன் மாதங்களில் கோடையின் உக்கிரம் காரணமாக நீர்மட்டம் குறைந்தது. இந்த நிலையில் கடந்த ஜூலை மாதம் முதல் தென்மேற்கு பருவ மழை பெய்யத் தொடங்கியது.

சிறுவாணி அணையில் எதிர்பார்த்த அளவுக்கு பெருமளவு மழை பெய்யாவிட்டாலும்கூட ஓரளவு மழை பெய்து வருகிறது. இதனால் அணையின் நீர்மட்டம் உயர்ந்து வருகிறது. கடந்த மாதம் 1–ந்தேதி அணையின் நீர்மட்டம் 868.85 மீட்டராக (கொள்ளளவு 878.50) இருந்தது. அதுவே 8–ந்தேதி 869.10 மீட்டராகவும், 26–ந்தேதி 870.2 மீட்டர் ஆகவும் உயர்ந்தது.

நீர்மட்டம் உயர்வு

கடந்த மாதம் 1–ந்தேதி முதல் நேற்று வரை ஒருசில நாட்கள் தவிர அணையில் தினமும் மழை பெய்து உள்ளது. தொடர்ச்சியாக பெய்த மழையால் இந்த மாதம் 1–ந்தேதி 870.85 மில்லி மீட்டராக இருந்த அணை நீர்மட்டம் மறுநாளே 871 மீட்டராக உயர்ந்தது. பின்னர் படிப்படியாக 871.15 மில்லி மீட்டரில் இருந்து நேற்று 871.75 மில்லி மீட்டராக உயர்ந்து உள்ளது. நேற்று பகலிலும் அணையிலும் அடிவாரத்திலும் நல்ல மழை பெய்தது. அணையின் நீர்மட்டம் உயர்ந்து வந்தாலும் கடந்த ஆண்டை ஒப்பிடும்போது நீர்மட்ட அளவு குறைவாகவே இருக்கிறது. கடந்த ஆண்டு ஜூலை மாதம் 1–ந்தேதி அணையின் நீர்மட்டம் 864.90 மீட்டராக இருந்து 18 நாட்களுக்குள், அதாவது 19.7.09 அன்று அணை நிரம்பிவிட்டது. அப்போது நிரம்பிய அணை ஆகஸ்ட், செப்டம்பர், அக்டோபர் மாதங்கள் மற்றும் நவம்பர் 11–ந்தேதிவரை அணை

நிரம்பியே இருந்தது. ஆனால் இந்த ஆண்டு இதே காலகட்டத்தில் அணை நிரம்பவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

**கோட்டயம் அருகே கால்நடை வளர்ச்சி மைய அடிக்கல் நாட்டு விழா**

பெரும்பாவூர்,ஆக.10–
கோட்டயம் மாவட்டம், வாகமன் என்ற இடத்தில் கால்நடை வளர்ச்சி மைய அடிக்கல் நாட்டு விழா நடந்தது. விழாவுக்கு உணவு வழங்கல் துறை மந்திரி திவாகரன் தலைமை தாங்கினார். சிறப்பு விருந்தினராக மத்திய விவசாயத்துறை மந்திரி கே.வி. தாமஸ் கலந்து கொண்டார். அவர் கால்நடை வளர்ச்சி மையத்திற்கான அடிக்கல்லை நாட்டினார். அப்போது அவர் பேசும் போது, கேரளாவில் கால்நடை வளர்ப்புக்கு திட்டம் தயாரித்து மத்திய அரசுக்கு மாநில அரசு அனுப்பி வைத்தால் நிதியுதவி செய்ய தயாராக இருக்கிறது. இங்கே கால்நடைகள் வளர்ப்பதன் மூலம் வெளிமாநிலங்களில் இருந்து இறைச்சி இறக்குமதி செய்ய வேண்டிய நிலை இனிமேல் இருக்காது என்றார்.விழாவில் மந்திரி திவாகரன் பேசும் போது, 2011–ம் ஆண்டுக்குள் கேரள மாநிலம் பால் உற்பத்தியில் தன்னிறைவு பெற்று விடும் என்றார். இந்த நிகழ்ச்சியில் பி.ஜி.போல் எம்.எல்.ஏ., கால்நடை முதன்மை செயலாளர் பி.கே.மெகந்தி, கால்நடை வளர்ச்சி இயக்குனர் அனிஎல்டோஸ் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.